**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் - OS.No.420/2008 P.W.1**

இந்த நீதிமன்றத்து உதவியாளர் திரு.எஸ்.மோகன், என்பவரால் வாக்குமூலம் பிரமாணம் செய்விக்கப்பட்டு தரப்பில் சாட்சியின் வாக்குமூலம் 1873-ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | கஜேந்திரன் | தொழில்: |
| த/பெ.: | | மதம்: |
| கிராமம்: | | ஜாதி: |
| வயது: | | வட்டம்: காஞ்சிபுரம் |

முதல் விசாரணை: **- 16.11.2018**

நான் இந்த வழக்கில் மூன்றாம் வாதி. இன்று பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 1 முதல் 26 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அவைகளை வாதிகள் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. 20.12.1933 தேதியிட்ட கிருஷ்ணசாமி முதலியார் அவர்களிடமிழருந்து அதனுடைய பங்குதாரார்கள் கிரயம் பெற்ற கிரய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.1.

2. 19.05.2008 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.2.

3. 19.10.1994 தேதியிட்ட தெய்வாணை அம்மாள் மற்றும்ட பலர் சேர்ந்து 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.3.

4. 08.05.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதியால் 8ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.4.

5. 08.05.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதியால் 9ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.5.

6. 08.05.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதியால் 10ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.6.

7. 08.05.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதியால் 11ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.7.

8. 08.05.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதியால் 12ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.8.

(மற்ற ஆவணங்களை குறியீடு செய்ய வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

**OS.No.420/2008** **P.W.1-கஜேந்திரன்** 11.01.2019

<u>**முதல் விசாரணை தொடர்ச்சி:-**</u>

மூன்றாம் வாதி ஆஜர்.

9. 29.08.2006 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள பட்டாவின் நகல் வா.சா.ஆ.9 (மெமோ மூலம் கணினி பட்டா தாக்கல் செய்யப்பட்டு, ஆவணமாக குறியீடு செய்யப்பட்டது).

10. 10.11.1997 தேதியிட்ட விஸ்வநாத நாயக்கர் அவர்களால் எழுதி வைக்கப்பட்ட உயிலின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.10.

11. 20.11.1997 தேதியிட்ட விஸ்வநாத நாயக்கர் அவர்களின் பவர் பத்திரத்தின் மூலம் மகேந்திரா கம்பெனி கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.11.

12. 05.12.1997 தேதியிட்ட விஸ்வநாத நாயக்கர் அவர்களின் பவர் பத்திரத்தின் மூலம் மகேந்திரா கம்பெனி கிரயம் பெற்ற கிரயப்பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.12.

13. 18.08.2008 தேதியிட்ட தென்மேல்பாக்கம் பஞ்சாயத்தது தலைவர் கொடுத்த சான்று வா.சா.ஆ.13.

14. 12.07.2008 தேதியிட்ட வாதிகள் வழக்கறிஞர் மூலம் கொடுத்த அறிவிப்பு வா.சா.ஆ.14.

15. 12.08.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் கொடுத்த அறிவிப்பு வா.சா.ஆ.15.

16. 17.08.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.16.

17. 28.08.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் கொடுத்த பதில் அறிவிப்பிற்கு வாதிகள் கொடுத்த மறு அறிவிப்பு வா.சா.ஆ.17.

18. 15.07.2008 தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.18.

19. 15.07.2008 தேதியிட்ட 2ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.19.

20. 15.07.2008 தேதியிட்ட 3ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.20.

21. 15.07.2008 தேதியிட்ட 4ம் பிரதிவாதி பெற்றுக்கொண்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.21.

22. 16.07.2008 தேதியிட்ட 5ம் பிரதிவாதி அனுப்பி பதிவு தபால் சீட்டு வா.சா.ஆ.22.

23. 16.07.2008 தேதியிட்ட 6ம் பிரதிவாதி திருப்பி அனுப்பிய தபால் உறை வா.சா.ஆ.23.

24. 15.07.2008 தேதியிட்ட 7ம் பிரதிவாதி பெற்றுக் கொண்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.24.

25. 15.07.2008 தேதியிட்ட 8ம் பிரதிவாதி பெற்றுக் கொண்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.25.

26. 15.07.2008 தேதியிட்ட 11ம் பிரதிவாதி பெற்றுக் கொண்ட ஒப்புகை அட்டை வா.சா.ஆ.26.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>**குறுக்கு விசாரணை (1, 8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்):-**</u>

எனக்கு மூத்தவர் 2ம் வாதி ராஜேந்திரன் சாட்சியம் அளிக்காத சூழ்நிலையில் 3ம் வாதியான நான் ஏன் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் எனக்கு வேண்டிய சொத்து தாவா சொத்தாக உள்ளது அதனால் சாட்சியம் கூறுகின்றேன். நான் இந்த வழக்கில் இதர வாதிகளை சாட்சிகளாக விசாரிக்க போவதில்லை. வழக்கு சொத்து எங்கள் வழக்கின் படியே ஆதியில் ஒரு கிருஷ்ணசாமி முதலியார் என்பவருக்கு சொந்தமான சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்படி கிருஷ்ணசாமி முதலியார் 11 நபர்களுக்கு அந்த சொத்தை கிரயம் கொடுத்தார். 11 நபர்களும் கூட்டாக ஒரு ரைஸ்மில் நடத்தினார்கள், அதன் பெயர் ஸ்ரீதிரௌபதி அம்மன் ரைஸ் மில். மேற்சொன்ன 11 நபர்களில் ஒரு நபர் என் தாத்தா, அவர் பெயர் சுப்ரமணிய நாயக்கர். சுப்ரமணிய நாயக்கருக்கு 4 பெண் குழந்தைகள், 3 ஆண் குழந்தைகள் இருந்தனர்.

11 நபர்களில் என் தாத்தா சுப்ரமணிய நாயக்கருக்கு மட்டும் பங்குதாரர் நிறுவனத்தில் எவ்வளவு பங்கு இருந்தது என்பதை காட்டுவதற்கு ஆவணம் இல்லை என்று சொன்னால் சரிதான். 11 நபர்களுக்குரிய கூட்டு சொத்தை என் தாத்தாவும், வேண்டரவாசி நாயுடு ஆகியோர் வாங்கி விட்டார்கள். அந்த இரண்டு பேரும் சொத்துக்களை வாங்கினார்கள் என்பதற்கு 1942 மற்றும் 1947ம் வருடத்திய இரண்டு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. எனது தாத்தா 10 நபர்களில் யார் யாருடைய பாகங்களை வாங்கினார் என்று எனக்கு தெரியாது. வேண்டரவாசி நாயுடு யார் யார் பாகங்களை வாங்கினார் என்பதும் எனக்கு தெரியாது. மேற்படி கிரயங்கள் ஆவணத்தின் அடிப்படையில் வாங்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது. எனது தாத்தாவிற்கு 7 குழந்தைகள். என் அப்பா விஸ்வநாதன் நாயக்கருக்கு அந்த சொத்துக்கள் எப்படி பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வாதுரை பத்தி 5ல் நான் கூறியுள்ளது போல் விஸ்வநாதன் மற்ற பங்குதாரர்களின் சொத்துக்களை வாங்கினார் என்பதற்கு நான் இந்த வழக்கில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

ஸ்ரீதிரௌபதி அம்மன் ரைஸ் மில்லுக்கு விஸ்வநாதன் பெயரில் லைசன்ஸ் இருந்தது என்பதற்கு லைசன்ஸ் எதுவும் தாக்கல் செய்யவில்லை. 3, 4 தலைமுறையாக சொத்து எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டது என ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், என் அப்பா

மற்றும் என் தாத்தா பெயரிலுள்ள ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறும் ஆவணங்கள் என் தாத்தா 1932ல் கிரயம் வாங்கியதாக நான் கூறுவது தான் என்றால் சரிதான். சாட்சி மீண்டும் வருடம் 1933 என்று கூறுகின்றார். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கு சொத்தை பொறுத்து வில்லங்க சான்றிதழ் வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன்.

என் அப்பா விஸ்வநாதன் நாயக்கருக்கு வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி ஆகியோர்கள் தான் வாரிசுகள் என்றால் சரிதான். 10.07.1993 மற்றும் 21.08.1993 ஆகிய தேதிகளில் முதலாம் பிரதிவாதி கிருஷ்ணசாமி முதலியார் வகையறாவிடம் இருந்தும், வேண்டரவாசி நாயுடுவிடம் இருந்தும், நடேசன் நாயக்கர் வாரிசுகளிடமிருந்தும், மேலும் மாணிக்க நாயக்கர் வகையறாவிடம் இருந்தும் கிரயம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 10.11.1997ல் எனது தந்தை விஸ்வநாதன் நாயக்கர் பங்கு நிறுவனத்தில் தனக்குரிய பாகத்தையும், இதர சொத்துக்களை குறித்தும் ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் எழுதி வைத்தார் என்று சொல்வது பற்றி எனக்கு தெரியாது. வாதிகளாகிய எங்களுக்குள் எந்தவித கருத்து வேறுபாடும் கிடையாது என்று சொன்னால் சரிதான். 4ம் வாதி பாஸ்கரன் 2ம் வாதிக்கு உயில் மூலம் கிடைத்த சொத்தை கிரயம் கொடுத்திருக்கிறார் என்று சொல்வது பற்றி எனக்கு தெரியாது. 2 மற்றும் 4ம் வாதிகள் உயில் மூலம் அவர்களுக்கு கிடைத்த சொத்தை பரிவர்த்தனை செய்து கொண்டார்கள் என்று சொல்வது பற்றியும் எனக்கு தெரியாது.

1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன்.

(கற்றறிந்த வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி (1, 8 முதல் 12 பிரதிவாதிகள் தரப்பில்):-</u>**

வா.சா.ஆ.10 என் அப்பா எழுதிய உயில். முதல் பிரதிவாதி மற்றும் 2, 4 வாதிகளுக்காக எழுதப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்கள் வா.சா.ஆ.10 உயிலில் காட்டப்பட்டுள்ளது. வழக்குரையில் இந்த உயில் எனது தகப்பனாரால் எழுதப்படவில்லை என்றோ, அதிலுள்ள கையெழுத்துக்கள் போலியானவை என்றோ, சாட்சியாக உள்ள கையெழுத்துகள் போலீயானவை என்றோ நான் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நாங்கள் நான்கு பிள்ளைகள், என்னை விட்டுவிட்டு மூன்று பிள்ளைகளுக்கு மட்டும் சொத்துக்களை கொடுத்துள்ளார். எனது அப்பாவிற்கு அது பூர்வீகமாக கிடைத்த சொத்து, அதை உயிலில் மூன்று நபர்களுக்கு மட்டும் கொடுப்பதற்கு அவருக்கு உரிமையில்லை. நான் மேலே சொன்ன விவரங்களை வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் அது பற்றி எங்கும் சொல்லவில்லை என்றாலும், இந்த வழக்கு விசாரணைக்காக அவ்வாறு கூறுகின்றேன் என்று சொன்னாலும் சரியல்ல. நான் ஏற்கனவே கூறிய ரைஸ்மில் என் தாத்தாவும் மற்ற 10 நபர்களும் கூட்டாக கிரயம் வாங்கிய சொத்து.

என் தாத்தா மறைவிற்கு பிறகு என் அப்பா விஸ்வநாதன் அந்த ரைஸ்மில்லில் எவ்வளவு பாக சொத்துக்களை அனுபவித்தார் என்று வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு ரைஸ்மில் சார்ந்த சொத்துக்களில் எவ்வளவு பாகம் உரிமை உண்டு என்றும், எவ்வளவு பாகம் கிரயம் பெற்றார் என்றும், அவருடைய காலத்திற்கு பிறகு என்னுடைய தகப்பனார் சட்டப்படி வாரிசு என்ற முறையில் எவ்வளவு பாகம் அவருக்கு வந்தது என்றும், மேலும் என் தகப்பனார் தனிப்பட்ட முறையில் எவ்வளவு கிரயம் வாங்கினார் என்றும் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் உள்ள விவரங்களை நான் படித்து பார்த்துள்ளேன்.

எதிர் வழக்குரை பத்தி 8ல் கிருஷ்ணசாமி முதலியார் பாகத்தில் 1/14 பாகத்தை 19.10.1994ல் 1ம் பிரதிவாதி வாங்கியதாகவும், மேலும் வேண்டரசி நாயுடு வாரிசுகளிடமிருந்து மூன்று பங்கை வாங்கியதாகவும், மேலும் நடேசன் நாயக்கர் வாரிசுகளிடமிருந்து 1/14 பாகம் வாங்கியதாகவும், மேலும் மாணிக்க நாயக்கர் வகையறாவிடமிருந்து 1 ½ பங்கு வாங்கியதாகவும்

சொல்லப்பட்டுள்ளது. நான் வில்லங்க சான்றிதழ் வாங்கிய போது மேற்சொன்னது போல் சொத்துக்களை வாங்கியதாக தெரிய வரவில்லை. அந்த வில்லங்க சான்றிதழை நான் இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. 5 முதல் 7 பிரதிவாதிகள் அவர்களுடைய பாகத்தை முதல் பிரதிவாதிக்கு கிரயம் செய்தது செல்லாது என நான் இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன். அந்த கிரய பத்திரத்தை நான் வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன். நான் அந்த ஆவணத்தை எப்பொழுதும் படித்து பார்த்ததில்லை. அதில் கிருஷ்ணசாமி முதலியார் வாரிசுகளுக்கு எவ்வளவு பாகம் இருந்ததோ அந்த பாகத்தை தான் 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்ததாக வா.சா.ஆ.3ல் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

எனது தாத்தாவிற்கு எவ்வளவு பங்கு இருந்தது, என் அப்பாவிற்கு எவ்வளவு பங்கு வந்தது, மீதி பங்குகள் எப்பொழுது கிரயம் வாங்கப்பட்டது போன்ற ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சாட்சி அந்த காலத்தில் கிரயங்கள் அனைத்தும் வாய்மொழி கிரயங்கள் என்றும், அதனால் ஆவணங்கள் இல்லை என்றும் கூறுகிறார். அனைத்தும் வாய்மொழி கிரயங்கள் என்று வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ கூறவில்லை என்றால் சரிதான். 2 மற்றும் 4 வாதிகள் உயில் மூலமாக கிடைத்த சொத்துக்களை அவர்களுக்குள் பரிவர்த்தனை செய்துள்ளார்கள் என்றும், கிரயங்கள் செய்துள்ளார்கள் என்றும் சொல்வது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு அந்த கிரயங்கள் பற்றி தெரியும் என்றாலும், அவர்கள் என்னோடு சேர்ந்து வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் கிரயங்கள் பற்றி தெரியாது என சாட்சியம் கூறுகின்றேன் என்று சொன்னாலும் சரியல்ல.

1ம் பிரதிவாதி என் தகப்பனார் எழுதி வைத்த வா.சா.ஆ.10 உயில் மூலம் ஒரு பகுதி சொத்திற்கும், பிற பகுதிகளை கிரயம் மூலம் வாங்கியும், ஆக மொத்த சொத்திற்கும் அவர் முழு உரிமையாளர் என்று சொன்னால் சரியல்ல. ரைஸ்மில்லில் உள்ள மொத்த சொத்திற்கும் 1ம் பிரதிவாதி ஆதிமூலம் பெயரில் பட்டா எண்.250 உள்ளது என்றால் சரிதான், என் அப்பா பெயரில் இருந்தது. அதை முதல் பிரதிவாதி அவர் பெயரில் மாற்றி கொண்டார். என் அப்பா பெயரில் இருந்த பட்டாவை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. அந்த பட்டா குறித்து இந்த வழக்குரையில் கூறவில்லை. வழக்கு சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்துக்கள்

என்றாலும், அவற்றில் பங்கு கோர எங்களுக்கு உரிமையில்லை என்று சொன்னாலும் சரியல்ல. அதனால் 1ம் பிரதிவாதி 8 முதல் 16 பிரதிவாதிகளுக்கு வீட்டுமனைகளாக பிரித்து கொடுத்த கிரயம் செல்லும் என்று சொன்னாலும் சரியல்ல. அதனால் வழக்கில் நாங்கள் கோரியுள்ள எந்த பரிகாரமும் எங்களுக்கு கிடைக்கத்தக்கதில்லை என்றாலும், வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை:-**

இல்லை.